[13th March 1958

SRI K. VINAYAKAM : Sir, the provision of doctors and the possibility of opening rural dispensaries is a matter which depends upon the principle like supply and demand and it is a vicious circle. Rural dispensaries are not in a position to attract doctors with better qualifications because the salaries offered by the Government are negligible. Instead of tackling this probllem, will the Government think of the possibility of creating more seats in the Medical Colleges with short-term courses befitting the demands of the rural dispensaries, namely, about two years of course in the Medical College just to get the knowledge enough to suit the demand of the rural dispensaries?

MR. SPEAKER : I think the hon. Member will be well advised to speak about this when the demand on 'Public Health' is taken up for consideration and not on this occasion.

SRI K. RAMASUBBU : ரூரல் டிஸ்பென்சரிகள் ஒரு நாளைக்கு 5 மணி நேரம் வேலை செய்யவேண்டும். அதைக் காலையில் 3 மணி நேரமும் சாயந்திரம் 2 மணி நேரமும் ஆக பிரித்துக்கொள்ளவேண்டிய அதிகாரம் டி.எம்.ஓ.-விடம் இருக்கிறது. இந்த அதிகாரத்தை உபயோகப் படுத்தி காலையில் 3 மணி நேரம், மாலையில் 2 மணி நேரமும் இந்த ஆஸ்பத்திரிகள் வேலை செய்யும்படி ஏற்பாடு செய்யலாம். அந்தந்த கிராம ஜனங்கள் சௌகரியத்திற்கு தகுந்தாற்போல் இந்த வேலை நேரத்தை அமைத்துக் கொள்ளலாம் என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதை இப்பொழுதுதான் கனம் அங்கத்தினர் மூலமாக நான் தெரிந்து கொண்டேன்.

SRI S. LAZAR : ஒரு பக்கம் டாக்டர்கள் இல்லாத காரணத்தினால் முக்கியமாக ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டுவருகின்றன. அதே சமயத்தில் இன்னொரு பக்கம் என்.இ.எஸ்., பிளாக் டெவலப்மெண்டு திட்டங்களின் கீழ் சர்க்காரின் கொள்கை அதிகமாக ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தவேண்டுமென்பது. இந்த இரண்டையும் எப்படி சர்க்கார் சமாளிக்கப்போகிறார்கள் என்பதை தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இதை எப்படி சமாளிப்பது என்று தெரியாமல்தான் இன்னும் அதுபற்றி யோசனை செய்துகொண்டிருக்கிறோம். (சிரிப்பு.)

* 306 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the allotment provided for the purchase of drugs for the rural dispensaries in the North Arcot district in 1957–58;

(*b*) where from the drugs are purchased;

(*c*) the value of drugs purchased out of the allotment after deducting the expenditure incurred in connexion with the purchase of cotton, quinine and bandage cloth; and

(*d*) whether the medicines required for injection are purchased?

13th March 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Rs. 34,000.

(*b*) The Medical Stores Depot, Madras, and the Indian Medical Practitioners' Co-operative Pharmacy and Stores, Limited, Adyar, Madras.

(*c*) Amount so far adjusted by the district board is Rupees 12,902–91 nP.

(*d*) No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : ஒரு கிராம மருத்துவ சாலைக்கு வருடம் ஒன்றுக்கு வைத்தியச் செலவிற்காக ரூ. 720 ஒதுக்கப் பட்டால், அதில் ரூ. 125 பஞ்சுக்காகவும், ரூ. 100 பாண்டேஜ் துணிக்காக வும், ரூ. 25 இதர சாமான்களுக்காகவும், மருந்துப் பொருள்களை வரவழைக்கும்போது ஏற்படும் ரெயில் செலவிற்காக கொஞ்சம் ரூபாயும், இதர செலவுகளுக்காக ரூ. 100-ம் செலவழிக்கப்பட்டு, கடைசியில் 195 ரூபாய்க்குத் தான் மருந்து வாங்கப்படுகிறது. கிராம மருத்துவ சாலை களில் இந்த அளவிற்குத்தான் மருந்துகள் வாங்க முடிகிறது என்றால், கிராம மக்களுக்கு போதுமான வைத்திய வசதி அளிக்க முடியுமா ? ஆகவே இந்தத் தொகையை அதிகரிப்பதற்கு சர்க்கார் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எந்த மருத்துவசாலை யில் இந்த மாதிரி நடக்கிறது என்று கனம் அங்கத்தினர் குறித்துக் கொடுத்தால் அதுபற்றி நான் கவனிக்கமுடியும்.

MR. SPEAKER : ஒரு ஆஸ்பத்திரியில் ஒரு குறிப்பிட்ட தொகை பஞ்சுக்காகவும், ஒரு குறிப்பிட்ட தொகை மருந்துக்காகவும் செலவழிக்கப் படுகிறது என்று சொல்வதற்கு கனம் அங்கத்தினர் ஆதாரம் காட்ட வேண்டும். ஏனென்றால், அங்கத்தினர் சொல்வது உண்மையாகவும் இருக்கலாம், உண்மையாக இல்லாமலும் இருக்கலாம், எப்படி இருந்தாலும், இப்படிப்பட்ட கேள்வியைப் போடுவதற்கு முன் அங்கத்தினர் எனக்கு ஆதாரம் கொடுக்க வேண்டும்.

SRI M. P. THIAGARAJA PILLAI : அனேக ஆஸ்பத்திரிகளில் மருந்து வசதி குறைவாக இருக்கிறது. மருந்துக்கு "இன்டெண்ட்" போடப்பட்டு அது "ஸப்ளை" செய்யப்படுவதில் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே மருந்து தாமதமில்லாமல் "ஸப்ளை" செய்யப்படுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அரசாங்கம் இந்த ஆஸ்பத்திரிகளுக்கு உதவிச் சம்பளம்தான் கொடுக்கிறது. மருந்துச் செலவை ஸ்தலஸ்தாபனங்கள் தான் ஏற்றுக்கொள்கின்றன. ஆகவே இது அவர்களுடைய பொறுப்பு.

SRI A. A. RASHEED : What is the amount paid as grants towards the cost of medicines in rural dispensaries?

THE HON. SRI M. A. MANICKAVELU : It depends upon the resources and the schedule of distribution of medicines by the district boards. The Government are concerned only in giving subsidies to the medical practitioner.

SRI K. RAMASUBBU : மெடிகல் ஸ்டோர்ஸிலிருந்து மருந்து வாங்கப்படும்போது அந்த ஸ்டோர்ஸ் "பார்வர்டிங் அண்ட் பாகிங் சார்ஜஸ்" க்காக பணம் வாங்கிக்கொள்ளுகிறார்கள். அந்த நிலையில் 60 ரூபாய் மருந்து வாங்கவேண்டுமானால் அந்த ஸ்டோர்ஸிற்கு 100 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. 100 ரூபாய் செலவிற்கு மொத்தம் 60 ரூபாய் பெறுமான மருந்துகள்தான் ஆஸ்பத்திரிக்குக் கிடைக்கிறது. இந்தக் குறையை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

[13th March 1958

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்தப் பிரச்னை சுகாதார மந்திரிகள் மகாநாட்டில் கவனிக்கப்பட்டது. மெடிகல் ஸ்டோர் ஸிலிருந்து மருந்துகளை வாங்குவதுதான் நல்லது என்று அந்த மகா நாட்டில் முடிவு செய்யப்பட்டது. ஏனென்றால், சில சமயங்களில் வெளி யில் மருந்து கிடைக்காத போதுகூட இந்த ஸ்டோர்ஸில் மருந்து கிடைக் கும். இந்த ஸ்டோர்ஸில் குறைந்த விலையிலும் மருந்துகள் கிடைக்கும். ஆனால், சில சமயங்களில் இந்த ஸ்டோர்ஸில் மருந்துகள் அதிக விலை யிலும் விற்கப்படுகிறது. பல விஷயங்களை கவனிக்கும் போது இந்த ஸ்டோர்ஸில் மருந்துகளை வாங்குவது தான் நல்லது. அனேகமாக எல்லா ராஜ்ய மந்திரிகளும் மெடிகல் ஸ்டோர்ஸ் இருக்க வேண்டுமென்றும், அங்கேயிருந்து தான் மருந்துகள் வாங்க வேண்டுமென்றும் ஒத்துக் கொண்டார்கள்.

SRI P. S. SANTHANAM: சட்டமன்ற உறுப்பினர்களுக் காக லெஜிஸ்லேட்டர்ஸ் ஹாஸ்டலில் திறக்கப்பட்டிருக்கும் மருத்துவ விடுதி யில் அவசியமான மருந்துகள் இல்லை என்றும், வெளியிலிருந்து மருந்து களை வாங்குவதற்கு அங்குள்ள மருத்துவ அதிகாரி கட்டளையிடுகிறார் என்றும் தெரிகிறது. இதைத் தடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக் குமா?

MR. SPEAKER: மூலக் கேள்வி, வட ஆற்காடு ஜில்லா யிலுள்ள கிராம வைத்திய சாலைகளைப்பற்றியது ஆகும். அங்கத்தினர் சென்னையிலுள்ள ஆஸ்பத்திரியைப் பற்றிக் கேட்கிறார்கள். இதற்கு எப்படி கனம் மந்திரி இப்போது பதில் சொல்ல முடியும் ?

SRI V. SANKARAN: கிராம வைத்தியசாலைகளில் இஞ்ஜெக்ஷன் மருந்துகள் வாங்கப்படுவதில்லை என்று கனம் அமைச்சர் தமது பதிலில் கூறினார். இந்த நவீன காலத்தில் இஞ்ஜெக்ஷன் கூடத் தேவை யில்லாமல் அவ்வளவு திடகாத்திரர்களாக கிராம மக்கள் இருக்கிறார் களா ? அப்படியில்லாவிட்டால், வேறு ஏதாவது காரணத்தினால் இன்ஜெக்ஷன் மருந்துகள் வாங்கப்படவில்லையா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இஞ்ஜெக்ஷன் போட்டுக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிற கிராம மக்கள் இஞ்ஜெக்ஷன் மருந்தை வாங்கிக் கொடுத்தால் கிராம வைத்தியசாலைகளிலுள்ள அதி காரிகள் இஞ்செக்ஷன் போடுவார்கள். ஆஸ்பத்திரியிலேயே இஞ்ஜெக்ஷன் மருந்துகளை வாங்கிக் வைத்திருக்கவேண்டியது அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

SRI P. G. MANICKAM: மருந்து சப்ளைக் கடை அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றனவா அல்லது தனிப்பட்டோரால் நடத்தப்படுகின்றனவா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அவை மத்திய அரசாங் கத்தால் நடத்தப்படுகின்றன.

Government Hospital, Polur

* 307 *Q.*—SRI S. M. ANNAMALAI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a lady doctor is employed in the Polur Government Hospital; and

(*b*) if not, for how long?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir, from 10th January 1958.

(*b*) The post was vacant from May 1956 and it could not be filled up earlier due to dearth of candidates.